# திராவிட சினிமா 8

**கருத்து மக்களிடம் பற்றிக் கொண்டால் தீயாகப் பரவும் என்பதுபோல, திராவிடக் கொள்கைகளை, சமதர்ம நோக்கங்களை, சமூகநீதிச் சிந்தனைகளைத் திரைத்துறை மூலம் மக்களிடம் கொண்டு சேர்த்தனர் நமது முன்னோடிகள். கல்வியில் முன்னேற்றம் கண்டு கொண்டிருந்த தலைமுறைக்குக் கொள்கை பேசிய கலைவடிவங்கள் பல்கலைக்கழகமாகத் திகழ்ந்தன. அந்த வகையில் திரைப்படம் என்கிற நவீன ஊடகத்தின் மூலம் அரசியல் மாற்றத்துக்கான திருப்புமுனைகளை உருவாக்கின, திராவிடம் பேசிய திரைப்படங்கள். அந்த வரலாற்றை மீண்டும் வாசிக்கத் தருகிறது திராவிட சினிமா.**

■ **வீ.மா.ச.சுபகுணராஜன்**

படங்கள் உதவி : ஞானம்







# ‘பராசக்தி’

## திராவிட முன்னேற்றக் கழகத் திரைப்படம்

*1952* - ஆம் ஆண்டு, நவம்பர் 17-ஆம் நாள் தீபாவளி தினத்தன்று மெட்ராஸ் ராஜதானியில் வெளியானது கலைஞரின் **‘பராசக்தி’** திரைப்படம். சென்னை அசோக் தியேட்டரில் அந்தத் திரைப்படத்தின் முதல் நாள் காட்சியைக் கண்ட ஒருவர், ‘தமிழன்’ என்ற பெயரில் அன்றைய முதல்மந்திரி ராஜாஜிக்கு, ‘ஏன் உடனடியாக ‘பராசக்தி’ தடை செய்யப்பட வேண்டும்?’ எனப் புகார் ஒன்றை அனுப்பினார்.

‘நான் சென்னை அசோக் தியேட்டரில் முதல் நாளன்று படத்தைக் காணச் சென்றேன். தியேட்டரில் மனிதர்கள் குரங்குகள் போல டிக்கெட் கவுண்டரில் தொற்றித் தாவி ஒருவர் மேல் ஏறி, உள்ளே செல்லப் போராடிக் கொண்டிருந்தார்கள். இத்தனைக்கும் அந்தப் படத்தின் கதாநாயக நடிகர் உட்பட பலரும் அறிமுக நடிகர்களாம். பின் ஏன் இந்த ஆரவாரம்? எனக்குப் புரியவில்லை. ஆனால், திரைக்கதை - வசனம் மு.கருணாநிதி என்ற டைட்டில் கார்டு முதலில் போடப்பட்டதும், அரங்கம் அதிரும் வகையில் கைதட்டலும், விசில் ஒலியும் அடங்க வெகுநேரமானது.



‘எங்கள் திராவிடப் பொன்னாடே, கலை வாழும் தென்னாடே’ எனும் கமலாவின் நடனக்காட்சியுடன் துவங்கிய படத்தின் ஒவ்வொரு வசனமும் இந்த நாட்டை, ஆட்சியை இழிவு செய்தும், தேசாபிமானிகளின் மனம் புண்படும்படியாகவும் இருந்தது. ஆனால், அரங்கத்தில் ஒவ்வொரு காட்சிக்கும் பயங்கர ஆரவாரம். அதிலும் அந்தக் கோவிலில் பூசாரி தாக்கப்படுவதும், கோர்ட் காட்சிகளும் வசனமும் ஜனங்களை மிக மோசமான பாதையில் அழைத்துச் செல்லக் கூடியவை’ **(நன்றி : பேரா. எம்.எஸ். எஸ்.பாண்டியன்).**

### கொள்கை விளக்கப் படமான நாடகம்!

கலைஞரின் ‘பராசக்தி’ படம் தி.மு.க.வின் ஒரு கொள்கை விளக்கப் படமாகவே உருவாகியிருந்தது. பாவலர் பாலசுந்தரத்தின் மூலக்கதையைத் திரைக்கேற்றார் போல வடிவமைத்தார் கலைஞர்.

கதைக்களம், மதுரையில் வசதியாக இருந்து ஏழ்மைக்குத் தள்ளப்படும் குடும்பத்தில் அண்ணன்கள், ரங்கூன் சென்று அங்கே பெரும் பொருள் ஈட்டுகின்றனர். மூத்தவர் சந்திரசேகரன் பாரிஸ்டர். மதுரையில் தங்கையின் திருமணத்துக்குப் பெரும் பணமும் நகையும் கொண்டு போகத் தயாராகும் போது இரண்டாம் உலகப் போர் மூள்கிறது. கடைசித் தம்பியை மட்டும் கப்பலில் அனுப்புகிறார்கள்.போர்க் கப்பல் பயணத்தை நீட்டிக்க, தங்கையின் திருமணம் முடிந்துவிடுகிறது. மற்றவர்களும் ஜப்பானின் குண்டுத் தாக்குதலுக்குத் தப்பி, நடந்தே அல்லல்பட்டு நாடு அடைகிறார்கள். குடும்பம் தொடர்பற்று அறுந்து போகிறது.

தங்கையைக் காண பொருளோடு வந்த குணசேகரன், அதனை இழந்து விட்டு பைத்தியமாக நடித்து, பிடுங்கித் தின்று பிழைத்து மதுரை வருகிறான். அங்கே தங்கை கல்யாணியை, கையில் குழந்தையுடன் கைம்பெண்ணாகக் காண்கிறான். தங்கை கல்யாணி எதிர்கொள்ளும் அவலங்களைத் தடுக்கும் சக்தியற்றவனாக இருக்கிறான் . பசியால் துடிக்கும் குழந்தையைக் கொன்ற குற்றச்சாட்டில் கல்யாணியும், அவளை பாலியல் பலாத்காரம் செய்ய முயன்ற பூசாரியை அரிவாளால் தாக்கிய குற்றத்துக்காக குணசேகரனும் கோர்ட்டில் நிறுத்தப்படுகிறார்கள்.

தங்கையின் வழக்கை, அண்ணன் சந்திரசேகரனே நீதிபதியாகி விசாரித்து, அவளை அடையாளம் கண்டு மனப் பிறழ்வடைகிறார்.கல்யாணி, குணசேகரன் வழக்கு இரண்டுக்கும் குணசேகரன் மீது காதல் கொள்ளும் பகுத்தறிவாளர் குடும்பத்துப் பெண் விமலா உதவுகிறார். ஞானசேகரனோ குண்டுவெடிப்பில் காலை இழந்து அகதியாக, பிச்சைக்காரனாக வாழ்ந்து அவர்களுக்காகக் குரல் எழுப்பி, அவர்களுக்காக அமைப்புக் கட்டுகிறவனாக மாறியிருக்கிறான். இறுதியில் குடும்பம் ஒன்றிணைகிறது.

### தலைவர்கள் பற்றிய குறியீடுகள்!

திரைப்படத்தின் ஒவ்வொரு காட்சியிலும் கருத்துச் செறிவான வசனங்கள். காட்சிகளின் போக்கில் நேரடியாகவும் மறைமுகமாகவும் உண்டு. திராவிட இயக்கத் தலைவர்கள் பற்றிய செய்திகள், குறிப்புகள் ஆகியவை படத்தை இயக்கங்களோடு தொடர்புறுத்தும்.

ரங்கூனில் சகோதரர்களுக்கு உதவி, வாழ வைத்த சந்திரசேகரனின் மனைவியின் தந்தையாக நீதிக்கட்சித் தலைவர் பிட்டி தியாகராயர் படம் மாட்டப்பட்டிருக்கும். அவரையே ‘அப்பா’ என வணங்குவார்கள். மனைவி கேட்பார், ‘உங்கள் அப்பாதான் தமிழ்நாட்டில் இருக்கிறாரே’ என்று. ‘ஆனால், அவர் இப்போது எங்களை விட்டு விலகி தூரத்தில் அல்லவா இருக்கிறார்’ என்பார்கள். இது தந்தை பெரியார் பற்றிய குறிப்பு.

விமலாவின் அண்ணன் தொடர்ந்து மக்களை விழிப்புணர்வு கொள்ளச் செய்யும் பணியில் தினசரியாக பொதுக்கூட்டங்களுக்குச் செல்வார். ஒரு கட்டத்தில் மனச் சோர்வடையும் குண சேகரனைத் தேற்ற, விமலா பேசுவாள். அவளிடம் ‘இவ்வளவு சமூகச் சிந்தனைகளைத் தெளிவாகப் பேசுகிறாயே... இதையெல்லாம் யாரிடம் கற்றாய்?’ என்று குணசேகரன் கேட்க, ‘அண்ணாவிடம்தான்’ என்பாள். இங்கே அண்ணாவும் அவளது அண்ணனும் ஒன்றாகிவிடுகிறார்கள்.

### காத்திரமான பெண் கதாபாத்திரங்கள்

பராசக்தியின் பெண் பாத்திரங்கள் அபாரமானவர்கள். பாலியல் சுரண்டல்காரர்களால் துரத்தப்பட்டு, துயரின் விளிம்பில் தடுமாறும் கல்யாணிகூட, ‘குழந்தையைக் கொன்ற குற்றத்துக்கான வழக்கில் நீதிமன்றத்தில் வாழ முடியாமல் தன் குழந்தைகளைக் கிணற்றில் வீசிய **நல்லதங்காள்** உள்ளிட்ட புராண இதிகாசப் பாத்திரங்களின் நியாயம் எனக்கில்லையா?’ எனக் கேட்கிறாள்.

கல்யாணியை பலாத்காரம் செய்ய முயன்ற கணவனிடம், ‘நானும் இது போல என் இச்சைக்காக வேறோரு ஆணின் கையைப் பிடித்திழுக்கட்டுமா?’ எனக் கேட்டு அதிர வைக்கிறாள், அவன் மனைவி. மதுரையில் கல்யாணிக்கு உதவும் பக்கத்து வீட்டு அம்மா, ‘என் இடமொன்று இருக்கு. அங்கே இட்லி கடை வைத்துப் பிழைத்துக் கொள். என்ன செய்ய இந்த நாட்டில் தாலியறுத்தவர்களுக்கெல்லாம் இட்லிக் கடைதானே தாசில் (தாசில்தார்) உத்தியோகம்’ என்கிறாள்.

விமலாவோ சுயமரியாதைச் சுடரொளி. தமிழ் சினிமாவின் முதல் பகுத்தறிவுப் பெண். குண சேகரனை, ‘ஏன் நீ உன் தங்கைக்காக மட்டும் அழுது புலம்புகிறாய். இந்த நாட்டில் எத்தனை ஆயிரம் கல்யாணிகள் இருக்கிறார்கள் தெரியுமா? அவர்களுக்கும் சேர்த்துப் போராடு. சுயநலம் பொதுநலமாகும் போது செயலும் நீயும் பெருமை பெறுவீர்கள்’ எனப் பேசி அவனைக் கதைநாயகனாக்குவதே விமலாதான்.

இன்னும் சொல்வதானால் செயலற்று ஏமாற்றிப் பிழைத்து வயிறு நிறைத்து, சொந்தத் தங்கைக்கே உதவ முடியாத உழைப்பற்றவனைத் தூண்டிச் செயல்பட வைக்கிறாள்.

### விசாரணை அதிகாரியின் பாராட்டு

‘பராசக்தி’ படத்தின் ‘கோவிலைத் தாக்கினேன் கோவில் கூடாது என்பதற்காக அல்ல, அது கொடியவர்களின் கூடாரமாகிவிடக்கூடாது என்பதற்காக’ எனும் வரிகள் ஒரு வெகுமக்கள் தேர்தல் அரசியல் கட்சிக்கான நுட்பமான நிலைப்பாட்டை எளிய வார்த்தைகளில் பேசிவிட்டது தானே..! அதுதான் வெற்றி.

வேடிக்கை என்னவெனில், ராஜாஜி மற்றும் அவரது தேசபக்த கோஷ்டியின், ‘பராசக்தி’ தடை முயற்சி, விசாரணை அதிகாரியின் படம் குறித்த பாராட்டு அறிக்கையால் தோற்றுப் போனது. **சிவாஜி கணேசன், எஸ்.எஸ். ராஜேந்திரன், சகஸ்ஹரநாமம், ரஞ்சனி, பண்டரிபாய் மற்றும் பலர் நடித்த படத்தை கிருஷ்ணன் - பஞ்சு இயக்கினர்.**

...படம் விரியும்

---

## ஊசலாடும் அகண்ட பாரதம்!



செங்கோல், அகண்ட பாரத சிற்பங்கள், சோமாலியா நாட்டு நாடாளுமன்றத்தின் காப்பி என புதிய நாடாளுமன்றம் திறந்ததில் இருந்து தினந்தோறும் ஏதேனும் ஒரு விஷயத்துக்காக அது விமர்சனத்துக்குள்ளாகி வருகிறது. இந்த வரிசையில் இப்போது இணைந்திருக்கிறது... ஃபூக்கோ பெண்டுலம்.

‘பூமி என்பது நிலையாக இருக்கும் ஒன்றல்ல. அது எப்போதும் சுற்றிச் சுழன்றுகொண்டே இருக்கிறது’ என்பதை அறிவியல் பூர்வமாக மக்களுக்குப் புரிய வைப்பதற்காக, பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த லியோ ஃபூக்கோ என்ற இயற்பியலாளர் 1851-ல் உருவாக்கிய கருவிதான், பூமி சுழல்வதைக் கணக்கிடும் ஊசல். பின்னாளில் அந்த ஊசல் ‘ஃபூக்கோ பெண்டுலம்’ என்று அழைக்கப்பட்டது. இந்த அறிவியல் பார்வை, பிற்காலத்தில் பூமி, நேரம் உள்ளிட்ட வானியல் தொடர்பான பல விஷயங்களைப் பற்றி ஆராய்வதற்குப் பயன்பட்டது.

சரி, இந்த ஊசல் ஏன் நாடாளுமன்றத்தில் வைக்கப்பட்டிருக்கிறது என்கிறீர்களா? இந்தியா எனும் சிந்தனையை, பிரபஞ்சம் என்ற சிந்தனையோடு ஒருங்கிணைப்பதன் அடையாளம்தான் இது என்கிறார்கள். அதாவது, இந்தப் பிரபஞ்சத்தைப் போல இந்தியா எனும் சிந்தனையும் மிகவும் விரிந்தது என்று பொருள். சுருக்கமாக **‘மீண்டும் அகண்ட பாரதம்’** என்பதை வேறு வடிவில் சொல்லத்தான் இந்த ஊசல் என்கிறார்கள் அரசியல் நோக்கர்கள்.

---

## :ப்ளாஷ்பேக்





பழனியப்பன்

### கொடியும் சின்னமும்!

கழகத்தின் இருவண்ணக் கொடிக்கும், உதயசூரியன் சின்னத்துக்கும் உரிமை கோரி, கட்சியில் இருந்து விலகிய சிலர் 1993-ம் ஆண்டு உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தனர். தீர்ப்பு வரும் நாளன்று சேலத்தில் வீரபாண்டி ஆறுமுகம் பொறுப்பில் அவசர செயற்குழுக் கூட்டமொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதில் கலைஞரும் கலந்து கொண்டார். உச்ச நீதிமன்றத் தீர்ப்பும் வெளியானது. கொடியும் சின்னமும் தி.மு.கழகத்துக்கே உரியது என நீதி நிலை நாட்டப்பட்டதும் அங்கிருந்த அனைவருக்கும் ஒரே கொண்டாட்டம். கட்டித் தழுவிக்கொண்டோம். அப்படியான இன்ப நாளில் எடுக்கப்பட்ட புகைப்படம் இது.

**-வீர. பழனியப்பன்,**
**பகுதி அவைத்தலைவர்,**
**சூரமங்கலம், சேலம்**

இது போன்ற அரிய புகைப் படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033 -24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

---


## கருவூலம்

### உ.பி.யில் கலைஞர் கர்ஜனை!

**1973-ல், உத்தரப் பிரதேசத்தில் ஜனாதிபதி ஆட்சி அமலில் இருந்தது. அப்போது அலகாபாத் நகரில் தாழ்த்தப் பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் மாநாட் டுக்குச் சென்றிருந்தார் கலைஞர். அன்று அந்த நகரம் முழுவதும், ‘இராமனின் விரோதி கருணாநிதி’ என இந்தி சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன. மாநாட்டைத் தொடங்கி வைத்து கலைஞர் ஆற்றிய சிறப்புரையில், “இராமனுக்கு விரோதி இராவணனே தவிர, நானல்ல. இதைக்கூடப் புரிந்து கொள்ளாத சிலர் இங்கு இருக்கின் றனர்” எனச் சாடியதுடன், ஜனாதிபதி ஆட்சிக்கு எதிராகவும் முழங்கினார்.**

---

## திராவிடத்தால் வாழ்கிறோம் 136




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131